**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **IA.1/2022 ID.7/2020** | **in சாட்சியம்** | **:** | **PW1** |
| **Name** | **:** | **திரு. மோகன்குமார்** | | | |
| **Date** | **:** | **10.06.2024** | | | |
| **Time** | **:** | **11.10 a.m. to 11.45 a.m.** | | | |

**<u>ம.த.சா.1/நிர்வாகம் திரு. மோகன்குமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். எதிர்மனுதாரர்/தொழிலாளர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கடந்த 13 ஆண்டுகளாக மனுதாரர் நிருவாகத்தில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் நிறுவனத்தில் எதிர்மனுதாரர் தொழிற்சங்கம் தான் முதன்முதலில் தொடங்கப்பட்ட தொழிற்சங்கம் என்றால் தவறு. ஒரகடம் Royal Enfield Employees General Union தான் எங்கள் நிறுவனத்தில் முதலில் தொடங்கப்பட்ட சங்கம் ஆகும். மேற்படி சங்கம் எந்த வருடம் தொடங்கப்பட்டது என நினைவு இல்லை. எதிர்மனுதாரர் தொழிற்சங்கம் எந்த வருடம் தொடங்கப்பட்டது என தெரியாது. தொழிற்சங்கத்தின் துணை விதிகளை நான் படித்துபார்த்ததில்லை. தொழிற்சங்கத்தின் பொதுகூட்ட குறிப்புகளை படித்துபார்த்ததில்லை. எதிர்மனுதாரர் தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் யார் யார் என்ற விவரம் தெரியும். இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் சங்கத்தில் துணை தலைவர் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. சங்கத்தின் பொது செயலாளர் மூலம் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் எதிர்மனுதாரராக சங்கத்தின் துணைதலைவரை தான் காட்டியுள்ளேன். நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்ட அரசாணையை படித்து பார்த்திருக்கிறேன். அரசாணையில் துணை தலைவர் தான் சங்கத்தின் பிரதிநிதியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் ஆமாம். சங்கத்தின் தலைவராக

குசேலா் என்பவா் இருந்த விவரம் தெரியும். துணைத்தலைவராக திரு.சம்பத் என்பவர் இருப்பது தெரியும் மற்றொரு துணைத்தலைவர் பெயா் ராஜேஷ். துணைத்தலைவா் சம்பத் அவா்கள்தான் எதிா்மனுதாரர் சங்கம் சாா்பாக வக்காலத்து தாக்கல் செய்திருக்கிறாா் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிா்மனுதாரர் சங்கத்தில் தலைவருக்கு மட்டும்தான் சங்கத்தை கூட்டுவதற்கான அதிகாரம் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குசேலா் மற்றும் சம்பத் ஆகியோா் எதிா்மனுதாரர் சங்கத்தை கலைத்து விட்டதாக் சொல்லி நிா்வாகத்திற்கு கடிதம் எதுவும் அனுப்பியுள்ளாா்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் தொடா்புடைய தொழிலாளா்கள் யாராவது சங்கத்தில் இருந்து விலகிவிட்டதாக சொல்லி கடிதம் கொடுத்துள்ளாா்களா என்றால் கொடுத்திருக்கிறாா்கள். எத்தனை போ் கொடுத்திருக்கிறாா்கள் என்றால் தற்சமயம் சரியாக தெரியவில்லை. அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிா்மனுதாரர் தொழிற்சங்கத்தில் இருந்து தினேஷ்பாபு, ராஜேஷ், முருகன், பாா்த்திபன், செல்வகுமாா் ஆகியோா் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சங்கத்திலிருந்து நீக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபா்கள் சங்கத்தை கலைக்கவேண்டும் என கொடுத்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபா்கள் யாரும் எதிா்மனுதாரர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இல்லாமல் வேறு சங்கத்தில் உறுப்பினா்களாக தற்சமயம் உள்ளாா்கள் என்றால் ஆமாம். ஒரகடம் Royal Enfield Employees General Union னின் அங்கீகாரம் மற்றும் Sponsorship எங்கள் நிா்வாகம் தான் செய்தது என்றால் அங்கீகாரம் மட்டுமே செய்துள்ளது Sponsorship செய்யவில்லை. எங்கள் நிா்வாகம் தினேஷ்பாபு மற்றும் ராஜேஷ் ஆகிய இருவரையும் பணியிடமாற்றம் செய்தது என்றால் ஆமாம். மேற்படி இருவரும் ம.சா.ஆ.1 கடிதம் கொடுத்தபின்னா் பணியிடமாற்றம் ரத்து

செய்யப்பட்டு ஒரகடத்தில் பணியமர்த்தபட்டார்கள் என்றால் இல்லை. ஒரகடத்தில் இல்லாமல் வேறு கிளையில்தான் பணியில் உள்ளார்கள். ராஜேஷ் சோழிங்கநல்லூர் பணியமர்த்தப்பட்டு தற்சமயம் ஒரகடம் கிளையில் உள்ளார். தினேஷ்பாபு சோழிங்கநல்லூர் கிளியில் உள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் தினேஷ் பாபு அசாம் மாநிலத்திற்கும், ராஜேஷ் ஐதராபாத்திற்கும் பணியிடமாற்றம் செய்யப்பட்டார்கள் என்றால் இல்லை. ராஜேஷ் சோழிங்கநல்லுருக்கும் தினேஷ்பாபு பாண்டிச்சேரிக்கும் பணியிடமாற்றம் செய்யப்பட்டார்கள். மேற்படி இருநபர்களின் பணி பதிவேடு தாக்கல் செய்ய இயலும். எங்களுக்கு கடிதம் கொடுத்த ஐந்து பேருக்கும் எதிர்மனுதாரர் சங்கம் சார்பாக முடிவெடுக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. எங்கள் நிர்வாகத்திற்கு சாதகமாக அவர்கள் மாறிய காரணத்தினால் நாங்கள் ம.சா.ஆ.1, 2 ஆவணத்தை எழுதி வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. அரசாணையில் பரிந்துரைக்கப்பட்ட எழு வினாக்களை திரும்ப பெற வேண்டும் என கேட்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு இல்லை என்றாலும் எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.06.26 18:39:35 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.